**செய்தி வெளியீடு எண் : 1890** **நாள் : 30.10.2022**

**செய்தி வெளியீடு**

**04.09.2022 அன்று நடைபெற்ற அரசு திரைப்பட விருதுகள் வழங்கிய விழாவில் பங்கேற்க இயலாத 41 விருதாளர்களுக்கு இன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

2009 முதல் 2014 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 04.09.2022 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு ரொக்கத்திற்கான காசோலையும் சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் மற்றும் சின்னத்திரையின் சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்கள், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் பெறும் விருதாளர்களுக்கு தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் என 255 விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், அன்றைய தினம் நடைபெற்ற விழாவில் பங்கேற்க இயலாத 41 விருதாளர்களுக்கான தங்கப்பதக்கம், காசோலை, நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (30.10.2022) வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நல்கினார். கூடுதல் இயக்குநர்(செய்தி) திரு.சிவ.சு.சரவணன் அவர்கள் நன்றியுரையாற்றினார். கூடுதல் இயக்குநர்(ம.தொ)திரு.மு.பா.அன்புச்சோழன் அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in